**பெருந்தோட்ட வலயத்திற்கான புதிய கிராமங்கள் அபிவிருத்தி அதிகாரசபை - 2019**

---

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

பெருந்தோட்ட வலயத்திற்கான புதிய கிராமங்கள் அபிவிருத்தி அதிகாரசபையின் (''அதிகாரசபை'') 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக்கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமானங்கள் செலவுகள் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களுக்குரிய குறிப்புக்கள், பொழிப்பாக்கிய முக்கிமான கணக்கீட்டு கொள்கைகள் என்பவற்றை உள்ளடக்கிய 2019 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிக் குடியரசு அரசியலமைப்பின் 154 (1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டம், 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகார சட்டம் மற்றும் 2018 இன் 32 ஆம் இலக்க பெருந்தோட்ட வலயத்திற்கான புதிய கிராமங்கள் அபிவிருத்தி அதிகார சபை தொடர்பான அதிகாரச் சட்டத்தின் 22 ஆம் பிரிவிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையின் பிரகாரம் எனது அறிக்கை உரிய காலத்தில் பாராளுமன்றத்தில் முன்வைக்கப்படும்

எனது அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படைப் பகுதியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களிலிருந்தான தாக்கத்தை தவிர்த்து அதிகாரசபையின் நிதிக்கூற்றுக்கள் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிநிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும், காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் வெளிப்படுத்துகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களை அடிப்படையாகக் கொண்டு எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கெண்டேன். இக்கணக்காய்வு நியமங்களின் கீழ் எனது பொறுப்பு இந்த அறிக்கையின் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு சம்பந்தமான கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.3 நிதிக் கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் மற்றும் அதனுடன் தொடர்புபட்ட நிருவகிக்கின்ற தரப்பினர்களின் பொறுப்பு**

இந்த நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது அதிகாரசபையின் ந்தியங்கும் இயலுமையைத் தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பென்றாக இருப்பதுடன் முகாமைத்துவமானது அதிகாரசபையை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் மற்றும் அதிகாரசபை தொடர்ந்தியங்குவதற்கு உரிய விடயங்களை வெளிப்படுத்துவதும் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாகும்.

அதிகாரசபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, நிருவகிக்கின்ற தொடர்புபட்ட தரப்பினர்களினால் வகிக்கப்படும்.
2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16 (1)ஆம் உப பிரிவின் பிரகாரம் அதிகாரசபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

**1.4 கணக்காய்வின் நோக்கெல்லை (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காள்வாளரின் பொறுப்பு)**

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக தாக்கம் ஏற்படுத்தலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.
என்னால் தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் ஒரு பகுதியாக கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால் மேலும்,

- மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துக்களை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டு விடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.
- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு அதிகாரசபையின் உள்ளகக் கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பாக அபிப்பிராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.
- கணக்கீட்டு கொள்கையின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களின் பொருத்தமான தன்மையையும் மதிப்பீடு செய்தல்.
- சம்பவங்கள் அல்லது நிலைமையின் காரணமாக அதிகாரசபையின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு அதிகாரசபைக்கு உள்ள ஆற்றல் தொர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்கு வருதல், பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்கு வந்தால் நிதிக்கூற்றுக்களில் அது சம்பந்தமான வெளிப்படுத்தல்களுக்கு எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்த வேண்டியதுடன் அந்த வெளிப்படுத்தல்கள் போதியவையாக காணப்படாதிருந்ததால் எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைத்தல் வேண்டும். எவ்வாறாயினும் எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாக கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான முறையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளமையை மதிப்பாய்வு செய்தல்.

முடியுமான அளவிலும் மற்றும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்கு கணக்காய்வு விடயப் பரப்பும் விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- பணிகளை தொடர்ச்சியான மதிப்பாய்வு செய்வதற்கு இணங்கக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, நடைமுறைகள், புத்தகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் கட்டமைப்பு நடைமுறைகள், புததகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான முறையில் பேணப்படுகின்றதா,
- ஏதேனும் பொருத்தமான எழுத்துமூல சட்டமொன்றிற்கு அல்லது அதிகாரசபையின் நிருவாக சபையினால் வெளியிடப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடொன்றிற்கு இணங்க அதிகாரசபை செயற்பட்டுள்ளதாக,
- தனது அதிகாரங்கள், கடமைகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா,
- வளங்கள் சிக்கனமாகவும், வினைதிறனாகவும் ஆக்கபூர்வமான கால எல்லையினுள் மற்றும் உரிய சட்டங்கள் மற்றும் விதிகளுக்கு இணங்க கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளதாக,

## 1.5 நிதிக்கூற்றுக்கள்

### 1.5.1 கணக்கீட்டு குறைபாடுகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களுக்காக எந்தப் பெறுமதியும் குறிப்பிடப்பட்டிருக்காத போதிலும் வரிசை அமைச்சினால் அதிகாரசபைக்கு வழங்கப்பட்டிருந்த 16 வகையான சொத்துக்களின் பெறுமதியை மீளக் கணிப்பிட்டு இலங்கை கணக்கீட்டு நியமம் இலக்கம் 16 இன் பிரகாரம் கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | அமைச்சின் மூலம் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ள சொத்துக்களை மீளக் கணிப்பீடு செய்து அடுத்துவரும் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்குதற்கு நடவடிக்கை எடுப்பேன். அவ்வாறே அதிகாரசபையினால் அதிக அளவில் பயன்படுத்துவது அமைச்சிடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட அலுவலக உபகரணங்கள் என்பதனால் அமைச்சு பின்பற்றுகின்ற கணக்கீட்டு கொள்கைகளைப் போல சொத்துக்களுக்கு பெறுமானத்தேய்வு செய்யாது கிரயத்தின் அடிப்படையில் கணக்கீடு செய்வதற்கான கொள்கைரீதியான தீர்மானம் எடுக்கப்பட்டிருந்தது. | அமைச்சினால் அதிகார சபைக்கு வழங்கப்பட்டிருந்த சொத்துக்களை கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 1.6 பெறவேண்டிய கணக்குகள் மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

### 1.6.1 செலுத்த வேண்டிய கணக்குகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| மீளாய்வாண்டின் போது நீர் வழங்கல் மற்றும் | செலுத்த வேண்டிய பணமாக பதிவுசெய்தல் தவறு என்பதனை | அமைச்சினால் அதிகார சபைக்காக |

| | | |
|---|---|---|
| உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி அமைச்சினால் அதிகார சபைக்காக செலவு செய்யப்பட்டிருந்ததுடன் அவற்றில் சம்பளங்கள் மற்றும் பணிப்பாளர் சபைப் படிகளைச் செலுத்துவதற்காக செலவு செய்யப்பட்ட ரூபா 498,000 பணம் இன்னும் தீர்த்துவைக்கப்படாது இருந்தது. | ஏற்றுக்கொள்கிறேன். | மேற்கொள்ளப்பட்ட செலவு தீர்த்துவைக்கப்படுதல் வேண்டும். |

## 1.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவ தீமானங்கள் முதலியவற்றுடனான இணக்கமின்மைகள்

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவ முதலிவற்றுக்கான தொடர்பு | | | இணக்கமின்மைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|---|---|
| (அ) | பீஈடீ/12 ஆம் இலக்க 2003 யூன் 02 ஆந் திகதிய அரசாங்க தொழில் முயற்சிகள் சுற்றறிக்கை | | | | |
| | (i) | 6.5.1 ஆம் பிரிவு | கணக்காண்டு முடிவடைந்து 60 நாட்களுக்குள் நிதிக்கூற்றுக்களும் வரைபு ஆண்டறிக்கையும் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் 2019 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1305 நாட்கள் தாமதித்து 2023 செப்தெம்பர் 27 ஆந் திகதியே சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. | ஆளணியினர் இல்லாததன் அடிப்படையில் உரிய ஆண்டில் மேற்கூறிய செயற்பாட்டினை நிர்ணயிக்கப்பட்ட வாறு நிறைவேற்றுவதற்கான இயலுமை கிடைக்க வில்லை. | கணக்காண்டு முடிவடைந்து 60 நாட்களுக்குள் நிதிக்கூற்றுக்களையும் ஆண்டறிக்கையையும் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பித்தல் வேண்டும். |
| | (ii) | 4.2.6 ஆம் பிரிவு | 2019 ஆம் ஆண்டிற்கான செயலாற்றல் அறிக்கை/ செயல் முன்னேற்ற அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | ஆளணியினர் இல்லாததன் அடிப்படையில் உரிய ஆண்டில் மேற்கூறிய செயற்பாட்டினை நிர்ணயிக்கப்பட்ட வாறு நிறைவேற்றுவதற் | செயலாற்றல் அறிக்கை/ செயல்முன்னேற்ற அறிக்கை சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | கான இயலுமை கிடைக்கவில்லை. | |
| (iii) | 5.1.3 ஆம் பிரிவு | 2020-2024 ஆண்டுகளுக்கான கூட்டிணைந்த திட்டம் தயாரிக்கப்படவில்லை. | ஆளணியினர் இல்லாததன் அடிப்படையில் உரிய ஆண்டில் மேற்கூறிய செயற்பாட்டினை நிர்ணயிக்கப்பட்ட வாறு நிறைவேற்றுவதற் கான இயலுமை கிடைக்கவில்லை. | 2020-2024 ஆண்டுகளுக்கா ன கூட்டிணைந்த திட்டம் தயாரிக்கப்பட வேண்டும். |
| (ஆ) | 2014 பெப்ரவரி 17 ஆந் திகதிய 01/2014 ஆம் இலக்க அரசாங்க நிதி சுற்றறிக்கை | | | |
| | 04 ஆம் பிரிவு | பின்வரும் விடயங்களை உள்ளடக்கும் வகையில் ஒரு செயல்நடவடிக்கைத் திட்டம் தயாரரிக்கப்பட்டிருக்கவில் லை.<br>- உரிய ஆண்டிற்கு நாள துவரையாக்கப்பட்ட நிறுவனத்தின் தாபனக் கட்டமைப்பு, அங்கீகரித்த ஆளணியினர் மற்றும் தற்போதுள்ள ஆளணியனர் தொடர்பான விபரம்<br>- உரிய ஆண்டிற்கான பாதீடு<br>- உரிய ஆண்டில் வரு டாந்த பாதீட்டினை அடிப்படையாகக் கொண்ட முன்னுரிமையின் பிரகாரம் தயாரிக்கப்பட்ட செயல் நடவடிக்கைத்திட்டம், அமுல்ப்படுத்தப்பட்ட கால அட்டவணை, அச்செயற்பாடுகளின் எதிர்பார்த்த விளைவுகள்/ பெறுபேறுகள்<br>- பிரதான பெறுகைகளுக் கான பெறுகைத்திட்டம் | 2019 ஆம் ஆண்டின் போது அதிகார சபையின் பணிப்பாளர் நாயகம் கணக்காளர் (பதில் கடமை) நிருவாக உத்தியோகத்தர் (பதில் கடமை) மாத்திரம் சேவையாற்றியுள னர். அவ்வாறே பெறுகை நடவடிக்கைகளுக் கான மூலதனச் செலவு விடயம் இல்லாததுடன் அபிவிருத்தி செலவுகளுக்காக வும் ஒரு செலவு விடயம் இருக்கவில்லை. | செயல் நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட வேண்டிய பிரிவுகளை உள்ளடக்கி சரியாக தயாரிக்கப்படுத ல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | - திறைசேரியின் நிதி ஏற்பாட்டின் அடிப்படையில் அமுல்ப்படுத்தப்படுகின்ற தொழில்முயற்சிகள் சம்பந்தமான வருடாந்த செயற்பாடுகளுக்கான கட்டுநிதி தேவைப்பாட்டுத் திட்டம்<br><br>- உள்ளகக் கணக்காய்வுத் திட்டம் | | |
| (இ) | அரசாங்க பெறுகை வழிகாட்டிக் கோவை 4.2.1 ஆம் பந்தி | ஆகக் குறைந்தது மூன்று ஆண்டுகளுக்காக பிரதான பெறுகைத் திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | 2019 ஆம் ஆண்டின் போது அதிகாரசபையின் பணிப்பாளர் நாயகம், கணக்காளர் (பதில் கடமை), நிருவாக உத்தியோகத்தர் (பதில் கடமை) மாத்திரம் சேவையாற்றியுள்ளனர். அவவாறே பெறுகை நடவடிக்கைகளுக்கான மூலதனச் செலவுகளுக்காக ஒரு செலவு விடயம் இல்லாததுடன் அபிவிருத்தி செலவுகளுக்காகவும் ஒரு செலவு விடயம் இருக்கவில்லை. | ஆகக் குறைந்தது மூன்று ஆண்டுகள் காலத்திற்காக பிரதான பெறுகைத் திட்டம் தயாரிக்கப்படுதல் வேண்டும். |
| (ஈ) | 2019 ஆகஸ்ட் மாதம் 22 ஆந் திகதி வரிசை அமைச்சின் மேலதிக செயலாளரின் MHNVICD/01/02/03 ஆம் இலக்க கடிதம் | மீளாய்வாண்டின் போது 06 மாதங்களுக்கான சம்பளமாக ரூபா 82,824 மிகையாகச் செலுத்தப்பட்டிருந்தது. | இது தொடர்பாக மேலும் விடயங்களை விசாரித்து எடுக்கப்படும் எதிர்கால நடவடிக்கைகள் தொடர்பாக உங்களுக்கு தெரியப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என | மிகையாகச் செலுத்திய சம்பளங்களை மீண்டும் அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

தயவாக
தெரிவிக்கிறேன்.

## 2. செயற்பாட்டு மீளாய்வு

### 2.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| அதிகாரசபையின் பிராந்திய பொறுப்பாளர் பதிவிக்காக முழு நேரத்திற்காக ஒருவரினை சேர்த்துக்கொள்ளாது நீர் வழங்கல் மற்றும் உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி அமைச்சின் கீழ் மானிட அபிவிருத்திக்குப் பொறுப்பாக சேவையாற்றிவந்த ஒரு உத்தியோகத்தர் ஒரு ஆண்டிற்கு ரூபா 240,000 பணக் கொடுப்பனவின் அடிப்படையில் சேர்த்துகொள்ளப்பட்டிருந்தனர். | 2019-06-03 ஆந் திகதி நடைபெற்ற பணிப்பாளர் சபை தீர்மானத்திற்கு இணங்க (பணிப்பாளர் சபைப் பத்திரம் இலக்கம் 5.2 இன் பிரகாரம்) வேலை ஒப்படைப்பின் அடிப்படையில் சேர்த்துகொள்ளப்பட்டிருந்தார். | அங்கீகரித்த பதவிக்கு முழு நேரத்திற்காக உத்தியோகத்தர்கள் சேர்த்துக்கொள்ளப்படுதல் வேண்டும். |

### 2.2 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| மீளாய்வாண்டின் போது ரூபா 2,498,060 செலவு செய்யப்பட்டிருந்ததுடன் அவற்றில் 80.24 சதவீதம் அதிகாரசபையின் சம்பளம் மற்றும் படிக்கொடுப்பனவிற்காகவும் 19.42 சதவீதம் பணிப்பாளர் சபைக் கூட்டங்களுக்காகவும் செலவு செய்யப்பட்டிருந்தும் அதிகாரசபையின் குறிக்கோள்கள் மற்றும் நோக்கங்களை நிறைவேற்றுவதற்காக அல்லது நிறுவனத்தின் பரப்பெல்லைக்குள் கொண்டுவரப்படுகின்ற எந்தவொரு செயற்பாட்டையேனும் நிறைவேற்றுவது தொடர்பாக செலவு செய்யப்பட்டிருக்கவில்லை. | நிறுவனம் ஸ்தாபிக்கப்பட்ட சந்தர்ப்பத்திலிருந்து செயற்பாட்டு நடவடிக்கைகளை ஆரம்பித்து பேணுவதற்குள்ள இயலுமை குறைந்த மட்டத்தில் காணப்பட்டது. அதற்காக தேவையான தீர்மானத்தினை எடுப்பதற்கு மற்றும் கொள்கையை உருவாக்குவதற்கு சில காலம் எடுப்பதுடன் அந்த நடவடிக்கைகளை செயற்படுத்துவதற்காக உத்தியோகத்தர்களுக்கு மற்றும் தீர்மானம் எடுக்கும் நடவடிக்கைகளுக்காக நடாத்தப்படுகின்ற பணிப்பாளர் சபைக் கூட்டங்களுக்காக பணத்தை கொடுப்பனவு செய்ய வேண்டியதுடன் அக்கொடுப்பனவுகள் உரிய சுற்றறிக்கைகளின் பிரகாரம் அங்கீகரித்த எல்லைக்கு உட்பட்டு மேற்கொள்ளப்பட்டது. | அதிகாரசபையின் குறிக்கோள்களையும் நோக்கங்களையும் நிறைவேற்றுவதற்கான செலவுகளை வினைத்திறனாக மேற்கொள்ளுதல் வேண்டும். |